# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT
# DEPARTMENT OF COMMERCE
## THIRD YEAR FIRST SEMESTER EXAMINATION IN BACHELOR OF COMMERCE 2002/2003 (JUNE/JULY – 2003)
## COM-3034 FINANCIAL INSTITUTION AND CAPITAL MARKET

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**NON-PROGRAMMABLE CALCULATOR PERMITTED**

01) i. மத்திய வங்கியினுடைய இயல்புகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

ii. மத்திய வங்கியினுடைய பிரதான தொழிற்பாடுகள் யாவை ? (06 புள்ளிகள்)

iii. மத்திய வங்கியானது "ஒதுக்க வங்கியாக" தொழிற்படுவதன் பொருளாதார முக்கியத்துவத்தை ஆராய்க. (08 புள்ளிகள்)

02) i. அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரத்தில் பலம் பொருந்திய வங்கியியல் திட்டத்தை (Sound Banking System) ஸ்தாபிப்பதற்காக கையாளப்பட வேண்டிய் நடவடிக்கைகள் யாவை ? (07 புள்ளிகள்)

ii. "ஐந்தொகைக்குள் அடக்கப்படாத நடவடிக்கைகள்" (Off-Balance Sheet Activities) என்ற பதத்தினால் நீர் கருதுவது யாது ? (07 புள்ளிகள்)

iii. "வியாபார வங்கியானது வேறுபட்ட சேவைகளை வழங்குவதன் காரணமாக ஏனைய வங்கிகளிலிருந்து வேறுபடுகின்றது" உதாரணங்களுடன் விரிவாக ஆராய்க. (06 புள்ளிகள்)

03) i. நிதியியல் அமைப்பு ( Financial Systems) ஒன்றின் தொழிற்பாடுகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

ii. பணச்சந்தை, மூலதனச்சந்தை ஆகிய பதங்களை வேறுபடுத்துக ? (05 புள்ளிகள்)

iii. உள்நாட்டு அந்நிய செலாவணிச் சந்தை (Internal Foreign Exchange Market) என்ற பதத்தினால் நீர் விளங்கிக் கொள்வது யாது ? (05 புள்ளிகள்)

iv. இலங்கையின் பணச்சந்தையினுடைய, வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்கின்ற காரணிகள் யாவை ? (05 புள்ளிகள்)

04) அ. வரையறுக்கப்பட்ட X கம்பனியானது 1000/= முகவிலையான 20 வருட முதிப்புகாலத்தைக் கொண்ட முறிகளை 20% கூப்பன் வட்டி வீதத்தில் வழங்கியது. ஓராண்டு முடிவில் பொருளாதாரத்தில் வட்டி வீதம் 20 வீதத்திலிருந்து 24 வீதமாக அதிகரித்தது.

i. முதலாவது ஆண்டின் முடிவில் அம்முறியின் பெறுமதி யாது ?

ii. மேற்கூறிய தரவுகள் மாறாத நிலையில் இரண்டாவது ஆண்டின் முடிவில் அம்முறியின் பெறுமதி யாது ?

iii. முதலாவது ஆண்டின் முடிவில் பொருளாதாரத்தில் வட்டி வீதம் 15 % மாக வீழ்ச்சியடைந்தது என எடுத்துக்கொண்டால் இரண்டாவது ஆண்டின் முடிவில் அம்முறியின் பெறுமதி யாது ?

(10 புள்ளிகள்)

ஆ

i. இடர்வட்டம் (Risk Premium) என்பதனால் விளங்கிக் கொள்வது யாது ? (02 புள்ளிகள்)

ii. N கம்பனியினுடைய கடன் பத்திரங்கள் , மற்றும் சந்தை கடன் பத்திரங்கள் தொடர்பான தரவுகள் உடமக்கு கீழே தரப்பட்டுள்ளன.

| பொருளாதார நிலைமை | நிகழ்தகவு | N கம்பனியின் கடன் பத்திரத்தின்வருவாய் வீதம் | சந்தையின் வருவாய் வீதம் |
|---|---|---|---|
| A | 0.3 | 10 | 08 |
| B | 0.2 | -15 | -11 |
| C | 0.1 | 12 | 10 |
| D | 0.2 | 05 | 08 |
| E | 0.4 | -04 | -02 |

N கம்பனியினுடைய β குணகத்தை (Beta co efficient) கணிப்பிடுக. (08 புள்ளிகள்)

05. i. வல்மார்ட் (Walmert) கம்பனியுடைய பங்கு விலை நடைமுறையில் 54 ரூபாவாகவும் அது இறுதியாக பங்கிலாபமாக 2 ரூபாவையும் உழைத்திருந்தது வல்மார்ட்டினின் ஸ்திரமான நிதி நிலையும், அதனால் ஆன குறைவான இடர் காரணமாகவும் அதனுடைய வேண்டப்பட்ட வருவாய் வீதம் 12% (Ks) மட்டுமே. பங்கிலாபம் எதிர்காலத்தில் நிலையான வீதத்தில் (g) வளர்ச்சியடையும் எனவும் வருவாய் வீதம் தொடர்ந்து 12% மாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படின் வல்மார்ட்டினுடைய எதிர்வரும் 4 வருடங்களுக்கு எதிர்பார்க்கப்படும் பங்கு விலை யாது. ? (05 புள்ளிகள்)

ii. உரிமைப்பங்குகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன..

$k_s$ -- பங்குதாரர்களுடைய வேண்டப்படுகின்ற வருவாய் வீதம் - 14%

N - அசாதாரண வளர்ச்சியுள்ள ஆண்டுகள் - 3

$g_s$ -- அசாதாரண வளர்ச்சிக் காலப்பகுதியில் முதல் இரண்டு வருடங்களுக்கான வளர்ச்சி வீதம் - 20%

$g_s$ -- அசாதாரண வளர்ச்சிக்காலப்பகுதியில் மூன்றாவது வருடத்திற்கான வளர்ச்சி வீதம் - 30%

$g_n$ -- அசாதாரண வளர்ச்சிக் காலப்பகுதிக்கு பின்னரான மாறாத வளர்ச்சி வீதம் - 10%.

$D_o$ -- கம்பனியால் செலுத்திய இறுதிப் பங்கிலாபம் - ரூ. 1.73

a. இன்றைய பங்குப் பெறுமதியை கணிப்பிடுக.

b. $P_1$ ஐயும் $P_2$ யையும் கணிப்பிடுக.

c. முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடங்களுக்கான பங்கிலாப வீதம், மூலதன இலாப வீதம் என்பவற்றை கணிப்பிடுக. (15 புள்ளிகள்)